# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

# 2021 – 2022

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 09

சுட்டெண்:............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உலகெங்கும் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழிபற்றி பேருரைகள் ஆற்றியவர்

அ) தனிநாயகம் அடிகள் ☐ ஆ) உருத்திரமூர்த்தி ☐
இ) கண்ணதாசன் ☐ ஈ ) பாவேந்தர் ☐

2. பின்வருவனவற்றுள் பகுசொல்

அ) கல் ☐ ஆ) கடல் ☐
இ) சிலை ☐ ஈ ) காவலன் ☐

3. ஈழத்தில் சிந்துவெளிச் சிற்பங்களை ஒத்த சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) ஆனையிறவு ☐ ஆ) ஆனைவிழுந்தான் ☐
இ) ஆனைக்கோட்டை ☐ ஈ ) ஆனைப்பந்தி ☐

4. ஆட்டத்து மங்கையர் போல் மொய்த்து நின்ற பயிர்

அ) கரும்பு ☐ ஆ) பயறு ☐
இ) நெல் ☐ ஈ ) வாழை ☐

5. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) பாளி ☐ ஆ) தமிழ் ☐
இ) சிங்களம் ☐ ஈ ) எலு ☐

6. மட்குடம் என்பதைப் பிரித்து எழுதினால்

அ) மன் + குடம் ☐ ஆ) மண் + குடம் ☐
இ) மட் + குடம் ☐ ஈ ) மட் + க்குடம் ☐

7. பாவக்காய் என்ற பேச்சுவழக்குச் சொல்லை, செவ்வழக்காக மாற்றி எழுதினால்

அ) பாகற்காய் ☐ ஆ) பாவற்காய் ☐

இ) பாவட்காய் ☐ ஈ) பாகற்க்காய் ☐

8. இலங்கையிலிருந்து குமரிக்கண்டத்தை ஆண்ட தமிழ் மன்னன்

அ) சேரலாதன் ☐ ஆ) இராவணன் ☐

இ) நெடுஞ்செழியன் ☐ ஈ) கரிகாற்சோழன் ☐

9. மணிமேகலை என்ற நூல் ____________ நூற்றாண்டில் எழுதப்பட்டது.

அ) கி.பி 4 ஆம் ☐ ஆ) கி.பி 7ஆம் ☐

இ) கி.பி 2 ஆம் ☐ ஈ) கி.பி 9ஆம் ☐

10. குதிரை கனைக்கும். அதுபோல் நரி

அ) ஊளையிடும் ☐ ஆ) கரையும் ☐

இ) முழங்கும் ☐ ஈ) கத்தும் ☐

11. "சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்...." இப்பாடலில் கூறப்பட்டுள்ள தொழில்

அ) உழவுத்தொழில் ☐ ஆ) கடற்றொழில் ☐

இ) மட்பாண்டத்தொழில் ☐ ஈ) கைத்தொழில் ☐

12. கலைஞர் என்ற சொல்லின் பகுதி

அ) ஞ் ☐ ஆ) அர் ☐

இ) கலை ☐ ஈ) ஞர் ☐

13. நிலத்தைத் தோண்டி ஆய்வு செய்தலை ______ என்று அழைப்பர்.

அ) அகழ்வாய்வு ☐ ஆ) திறனாய்வு ☐

இ) வானியல்ஆய்வு ☐ ஈ ) அறிவியலாய்வு ☐

14. பொன்முடி என்பது ______________ப் புணர்ச்சியாகும்.

அ) தோன்றல் ☐ ஆ) கெடுதல் ☐

இ) திரிதல் ☐ ஈ ) இயல்பு ☐

15. "பால்கொண்டு மடுப்பவும் உண்ணான்...." என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு ☐ ஆ) புறநானூறு ☐

இ) மணிமேகலை ☐ ஈ ) சிலப்பதிகாரம் ☐

16. வல்லினமெய் எழுத்துகளில் ஒன்று

அ) ற் ☐ ஆ) ங் ☐

இ) வ் ☐ ஈ ) ம் ☐

17. திருக்குறளைக் கடைக்கழகக் காலத்தில் அரங்கேற்றச் செய்தவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) ஔவையார் ☐

இ) திருவள்ளுவர் ☐ ஈ ) பாரதியார் ☐

18. உழவர் நெல் அறுவடை செய்தனர் என்பது

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐

இ) சினையாகுபெயர் ☐ ஈ ) இடவாகுபெயர் ☐

19. அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் கந்தரோடையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட ஆண்டு

அ) 1979 ☐ ஆ) 1980 ☐

இ) 1879 ☐ ஈ) 1880 ☐

20. ஈடுஇணையற்ற என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) அடுக்குத்தொடர் ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

21. வீரன் படுகளத்தில் விளையாடி வினைமுடிக்கிறான். இதில் படுகளம் என்பது

அ) கொடுவாள் ☐ ஆ) போர்க்களம் ☐

இ) போர்ப்படை ☐ ஈ) பாசறை ☐

22. தேன்மொழி அன்புடன் உணவைப் பரிமாறினாள். இச்சொல்லியத்தில் இடம்பெறும் பயனிலை

அ) உணவை ☐ ஆ) தேன்மொழி ☐

இ) பரிமாறினாள் ☐ ஈ) அன்புடன் ☐

23. புதியதொரு வீடு என்ற நாடகத்தில் கரகம் ஆடுவது

அ) நீர் ☐ ஆ) புயல் ☐

இ) மழை ☐ ஈ) முகில் ☐

24. தளிர்க்கை என்ற உவமை அணியில் வந்துள்ள உவமேயம்

அ) தளிர் ☐ ஆ) போன்ற ☐

இ) கை ☐ ஈ) மென்மை ☐

25. மகாவம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டிய நூல் எனத் துணிந்து அறிக்கை விடுத்தவர்

அ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ☐ ஆ) யே.பி. லூயிசு ☐
இ) தோமசு வான்றி ☐ ஈ ) லயனல் சரத் ☐

26. ஈழவன் தாயகத்துக்குச் சென்று துயிலும் இல்லங்களைப் பார்த்தான். இச் சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐
இ) கூட்டுச்சொல்லியம் ☐ ஈ ) கூற்றுச்சொல்லியம் ☐

27. கருமை, சதுரம் என்பன

அ) தொழிற்பெயர் ☐ ஆ) குணப்பெயர் ☐
இ) பொருட்பெயர் ☐ ஈ ) இடப்பெயர் ☐

28. தனிநாயகம் அடிகள் பிறந்த ஊர்

அ) முள்ளியவளை ☐ ஆ) நல்லூர் ☐
இ) கந்தரோடை ☐ ஈ ) கரம்பொன் ☐

29. தமிழ்நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 216 ☐ ஆ) 247 ☐
இ) 217 ☐ ஈ ) 30 ☐

30. மன்னன் புலவருக்குப் பொற்காசுகள் வழங்கினான். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ) கு ☐ ஆ) இல் ☐
இ) ஆல் ☐ ஈ ) அது ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

விசயன் இலங்கையில் வந்திறங்கிய காலத்தில், இலங்கையின் வடபகுதியில் நாகர்களும் தென்பகுதியில் இயக்கர்களும் ஆட்சி புரிந்தனர். இலங்கை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாவலந்தீவின் ஒரு பகுதியாகவே இருந்தது. குமரிக்கண்டத்தை ஆண்ட தமிழர் இலங்கையிலேயே தங்களது தலைநகரத்தை அமைத்திருந்தனர். குமரிக்கண்டம் கடலில் மூழ்கியபோது இலங்கை நகர் நாவலந்தீவிலிருந்து உடைந்து விலகித் தனித் தீவானது. அது தனித் தீவாகிய போதிலும் தமிழகத்தை ஆண்ட வேந்தர்களின் தலைநகராகவே இருந்தது. ஆரியச் சூழ்ச்சியினால் கொல்லப்பட்ட இராவணன் என்னும் பேரரசன் இலங்கையில் இருந்து தமிழகம் முழுவதையும் ஆண்டான். எனவே, குமரிக்கண்ட காலம் முதல் இன்றுவரை தமிழர் தொடர்ந்து வாழ்கிற மண் இலங்கை. ஆனால், தமிழர் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் விசயன் வருகிறபோது இலங்கையில் மக்கள் வாழவில்லை என்றும் மகாவம்சம் பொய்யும் புரட்டும் கூறுகிறது.

1. இலங்கை நகர் எதிலிருந்து உடைந்து தனித் தீவானது?

   ________________________________________

2. இராவணன் எதனால் கொல்லப்பட்டான்?

   ________________________________________

3. மகாவம்சம் கூறும் பொய்யும் புரட்டும் எவை?

   ________________________________________

4. இராவணன் எங்கிருந்து தமிழகம் முழுவதையும் ஆண்டான்?

   ________________________________________

5. குமரிக்கண்ட காலம் முதல் இன்றுவரை தமிழர் தொடர்ந்து வாழ்கிற மண் எது?

   ________________________________________

புள்ளிகள் 10



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தனிநாயகம் அடிகளாரால் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்ட இடங்களில் இரண்டின் பெயர்களைத் தருக.

2. ‘‘ஊடுருவி இருக்கிறதே மார்பில் அம்பு - வலி உனக்குத் தாங்காதே’’ இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

3. கோவேத என்ற தமிழ்ப் பிராமிய எழுத்தில் ‘கோ’ என்பது யாரைக் குறிக்கின்றது?

4. பன்மொழிப் புலமை என்றால் என்ன?

5. இலங்கைத்தீவில் தொல்குடியினர் தமிழர்களே என்பதற்கான சான்றுகள் எவை?

6. இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாழிக்காடு எது?

7. கவிஞர் உருத்திரமூர்த்தி விளைநிலத்தை ஏன் பாறை என்கிறார்?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## வள்ளுவர்

| போற்றும் | ஒப்பற்ற | சொல்லை |
|---|---|---|

| கடந்த | பெற்று |
|---|---|

உலக அரங்கில் உன்னதத் தமிழுக்கு
உயர்ந்த இடம் ________________த் தந்தவரே
ஈடு இணையில்லாத அரிய நூலை
எல்லோரும் ________________ வண்ணம் ஈந்தவரே

உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்ப்பான
ஒரே ________________ திருக்குறளைத் தந்தவரே
ஒன்றே முக்கால் வரியில் அழகாய்
உலகை அளந்து காட்டிய வித்தகரே

ஈராயிரம் ஆண்டுகள் ________________ பின்பும்
இன்றும் உலகில் நிலைத்திட்டவரே
தமிழ் என்ற ________________ப் பயன்படுத்தாமலே
தமிழுக்கு மகுடம் சூட்டிய மாண்பாளரே

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. உயிர்முன் மெய் புணர்தலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________________________

_______________________________

2. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

கார்காலம்

_______________________________

தாலாட்டு

_______________________________

3. பின்வரும் வினைச்சொற்களின் திணை, காலம், இடம் என்பவற்றைத் தருக.

| | திணை | காலம் | இடம் |
|---|---|---|---|
| மகிழ்ந்தாய் | ________ | ________ | ________ |
| கரைகின்றன | ________ | ________ | ________ |
| வாங்குவேன் | ________ | ________ | ________ |

4. மெய்யெழுத்துகள் எத்தனை? ____________________

அவற்றின் வகைகளைத் தருக.

_______________________________

5. சேர்த்து எழுதுக.

கல் + கோவில் ____________________

வட்டம் + மேசை ____________________

பணம் + வரவு ____________________

புள்ளிகள் 15



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

1. புலவர் ________________ பாடல் எழுதினார்.

   ( நறுந்தமிழில், நருந்தமிழில் )

2. திருக்குறள் உலக மக்களுக்கான சீரிய வாழ்க்கை ________________.

   ( வளிகாட்டி, வழிகாட்டி )

3. பாரிமகளிர் அடகு சமைத்து ஔவைக்கு ________________ க் கொடுத்தனர்.

   ( உண்ண, உன்ன )

4. விபுலாநந்த அடிகளார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளில் காலத்தால் ________________ யாழ்நூல்.

   ( அளியாதது, அழியாதது )

5. குமரிக்கண்டம் ________________ அழிந்தது.

   ( கடற்கோளால், கடற்கோலால் )

புள்ளிகள் 05



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தாயின் தாலாட்டு
- தனிநாயகம் அடிகளார்
- உணவு
  - உணவுகளின் வகைகள்
  - உணவுகள் கிடைக்கும் இடங்கள்
  - உணவுகளால் எமக்குக் கிடைக்கும் நன்மைகளும் தீமைகளும்
  - உமக்கு பிடித்த உணவு எது? ஏன்

புள்ளிகள் 20